OFFICE OF THE REGISTRAR OF BOOKS. 28 FEB 1911 MADRAS.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1911ஸு. பிப்பிரவரி மீ. 15உ. சாதாரணஸு. மாசிமீ. 4உ. { பகுதி 10

## பிரஹ்மஞான சபையின் யந்திரம்.

இப்பத்திரிகையின் முகப்பில் பிரசித்தமாகிவரும் முத்திரையாகிய அறிகுறியைப்பற்றிய உண்மை தெரியவேண்டுமென பலர் நிரூபம் எழுதியுள்ளார். அதன்கண் அடங்கிய உண்மையை இப்போது விளக்குவோம்.

ஒலிவடிவாகவும், வரிவடிவாகவுமாக ஞான உபதேசங்கள் இருமுறைகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒலிவடிவானவை மந்திரம் எனவும், வரிவடிவானவை தந்திரம் எனவும் சொல்லப்பெறும். மந்திரத்தின் சக்தியும் உண்மையும் விரிவானவை, பரந்தவை. தந்திரத்தின் சக்தியும் உண்மையும் அம்மந்திரத்தின் ஓர் ஓர் அம்சமாக விளக்கப்பெறும். அடியில்வரும் உபமானம் இக்கருத்தைத் தெளிவுபடுத்தும். ஒரு தொட்டியிலுள்ள ஜலம் அலையின்றி இருந்து சூரிய பிம்பம் அதன்மேல் படுமாகில், அதன் பிரதிபிம்பம் விருத்தமாக ஒரு சுவர் முதலியவைகளில் தோன்றும். அத்தொட்டி ஜலத்தில் யாமேதனும் ஒரு சுவரத்தைக் கானம்பண்ணினோமாகில், அலைகள் உண்டாகும். அதன்மீது, சூரிய பிரதிபிம்பம் சுவரின்மேல் விருத்மாகத் தோன்றாமல், சிதறுண்டு, பின்னம் பின்னமாக சலித்துக் கொண்டிருக்கும். அச்சலனங்கள் எண்ணிறந்தவைகளாக இருக்

கும். அச்சலனங்களை முழுமையும் புகைப்படமாகப் போடோ கிராப் எடுத்தல் முடியாது. யாதேனும் ஒரு சலனத்தைமாத்திரம் போடோகிராப் எடுத்தல் கூடும். இந்த உவமை தர்சநத்தில், அலைகள் எல்லாம் உண்டாவதற்குக் காரணம் ஒரு சுவரமாம். அவ்வலைகளில் ஒரு அலையின் சலனத்தின் போடோகிராப் தந்திரமாம். எல்லா அலைகளையும் போடோகிராப் செய்வோமாகில், அவைகள் எல்லாம் ஒருங்கே அம்மந்திரத்தின் பூர்ணசக்தியை அதாவது கலையை ஒருவாறு காட்டும். அதுவே தந்திரமாகும். அந்தத் தந்திரத்துக்குச் சூக்ஷ்மமான சக்தியுமுண்டு. தேவதா விக்கிரகங்கள், பிரதீகங்கள், ரேகைகளான யந்திரங்கள் இவை எல்லாம் அந்தத் தந்திரத்தில் அடங்கும். பிரஹ்மஞானசபையாரின் முத்திரை ஒரு யந்திரமாம்.

1. முதன்மையில் உள்ளே இருக்கிற, சூலம் (அல்லது சிலுவை) அதன்மேல் உள்ளவட்டத்தை கவனிப்போம் வட்டம் பரபிரஹ்மத் (Spirit) தையும், சூலம் அப்பிரஹ்மத்தினின்றே பிரகிருதி புருஷன் என்ற மிதுநம் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும், சூலத்தின்மேல் வட்டம் சைதந்நியமான பிரஹ்மமே எல்லாவற்றையும் தன்னுள் அடங்கப்பெற்றிருக்கின்றதென்பதையும், சூசிப்பிக்கின்றன.

2. பின்பு இரண்டு முக்கோணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று ஊர்த்துவமுகமாய் மேல்நோக்கியதாகவும், மற்றொன்று அதோமுகம், அதாவது, கீழ்நோக்கியதாகவும் இருக்கின்றன. அவைகள் இரண்டு ஓதப்புரோதமாக பின்னியிருக்கின்றன. மேல்நோக்கிய முக்கோணம், சத், சித், ஆநந்தம் என்ற முப்பான்மையதாகிய பிரஹ்ம சைதந்நியத்தைக் குறிப்பிடும். கீழ்நோக்கிய முக்கோணம் சத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுள்ள பிரகிருதியைக் குறிப்பிடும். இந்த இரண்டு முக்கோணங்களும் பின்னியிருக்கின்றநிலையான துவியக்தமாக இருக்கின்ற பிரபஞ்சத்தைக் காட்டும். பிரபஞ்சம் நிகழவேண்டுமானால், சைதந்நிய முறையில், சத், சித், ஆநந்தம் மூன்றும் இருத்தல் வேண்டும். அவைகளுக்குள், இது உயர்வு, இது தாழ்வு, என்பது கிடையாது. அவ்விதமே, பிரகிருதிமுறையில், சத்வ, ரஜஸ், தமஸ் என்ற குணங்களின் உயர்வு தாழ்வு

என்பது கிடையாது. எல்லாம் இன்றியமையாதவைகள். சத், சித் ஆநந்தம் என்பவைகள் புராணங்களில் பிரஹ்ம, விஷ்ணு, ருத்ரன் அல்லது சிவன் என பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவ்விதமே சத்வ ரஜஸ், தமஸ் என்பவைகள் முறையே, சரஸ்வதி, லக்ஷ்மி, காளி அல்லது பார்வதியாக பிரஸ்தாபிக்கப் படுகின்றன.

3. பிரபஞ்சத்தில், பிரகிருதி உடலாகவும், புருஷன் உயிராகவும் இருக்கின்றமை இக்கோணங்களால் விளங்கும். எல்லாம் சிவசக்திமயம் என்பார் சைவசமயிகள். இக்கோணங்களின் பக்கக்கோடுகள் ஒரே அளவுள்ளன. அதாவது, சிறு கோணங்களின் வெளியிலுள்ள 12 நேர் கோடுகள். அவைபன்னிரண்டு ஆதித்தியாள், ராசிக் கிரகங்கள் முதலியவைகளைக்குறிக்கின்றன.

4. சர்ப்பமண்டலம், அதாவது, வாலைத் தன்வாயில் கடித்துக்கொண்டிருக்கின்ற சர்ப்பவட்டம், ஆதி அந்தமில்லாத என்றுமுள்ள காலத்தைக் குறிப்பிடுகிறது. இருமுக்கோணங்களால் பிரிதீகப்படுத்திய பிரபஞ்சம் காலவரம்புக்குள் அடக்கம் என்பது விளங்குகிறது. எல்லா வஸ்துவும், காலம், தேசம், காரணகாரிய பரம்பரை என்ற, திரிபுடிபற்றியே நடைபெறும். இக்கால வரம்புக்குள் தான் பிரபஞ்சம் தோன்றலும் மறைதலுமாம்.

5. ஸ்வத்திகை அதாவது, ஸர்ப்பத்தின் வாயின் சமீபத்தில் உள்ள வளைந்த சூலம் அல்லது சிலுவையானது எப்போதும் இடையறாது பிரபஞ்சத்தில் சலநித்திருக்கின்ற சக்தி ஒன்று உளது என்பதைக் காட்டும். இது பராசக்தி என்றும் சொல்லப்பெறும். இதுவே தேவாத்மசக்தி என, ஸ்வேதாஸவதரோபநிஷத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்த யந்திரத்திற்குள் இன்னும் அநேக தத்துவங்களை அறிவின்மிக்கார், காண்பார்கள். இப்போது விவரித்திருக்கிற உண்மைகளை, இந்த யந்திரத்தைப் பார்க்குந்தோறும், நம் நினைவுக்குக் கொண்டுவருவோமாகில், அதனால் நமக்கும் சுகிர்தம் உண்டாம்.

ஓம் தத் ஸத் ஓம்.

சிவராமசுப்பிரமணியன்.

# மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது.

## 3-ம் அத்தியாயம்.

(முன் 291-ம் பக்கம் தொடர்ச்சி)

### ஜீவிக்கின்ற உயர்தர ஜீவர்கள், தேவகோஷ்டிகள்.

ஈசுவரனிடமிருந்து விகசிக்கும் பிராணகலை அனேகமானவும் நானுவிதமானவுமான ரூபங்களைப்பெறும். இந்த ரூபங்கள் நம்முடைய லோகத்தில்மாத்திரமல்ல. நம்முடைய புலன்களுக்குக் கோசரமான பிரகிருதியுடன் மாத்திரம் சம்பந்தமானவைகள் அல்ல. நமது என்ற இந்த லோகமானது, அகண்டமான தேசத்தின் ஒரு அற்ப தூளியாகும். நம்முடைய லோகத்தில், அந்த பிராணகலை தாதுவர்க்கத்தில் (Mineral) பரம அணுக்களாக இசைந்து இருத்தல் என்ற சத் அம்சமாக விளங்குகிறது. நானுவிதமான, ரூபங்கள் அமைந்த ஸ்தாவரவர்க்கத்தில், அந்த பிராணகலை, சித், ஆநந்த அம்சங்களின் ஏகதேசபாகமாக விளங்குகின்றது. அந்த அம்சங்களே இன்னும் அதிகமான ஜங்கமங்களான பிராணிகளில் உதயமாகுகின்ற உணர்வாகவும் அறிவாகவும் விளங்குகின்றன. மனிதனிடமோ, அந்த அம்சங்கள் பெருப்பாலும் விளங்குகின்றன. மனிதனே, ஈசுவரனின் முப்பான்மையான அம்சங்களை நோக்க, சிருஷ்டியின் சிகரஸ்தானத்தில் இருக்கின்றான். கல், மண் முதலிய தாதுவர்க்கத்தில், பிராணகலை சித் ரூபமாக வெளிப்படாமல், ஈசுவரனின் மூன்றும்அம்சமான சத்(இருத்தல்)ரூபமாக மாத்திரம் விளங்குகின்றது. இவைகளில் நான் என்ற பிரதக்பாவம் ஏற்படாமல் இருக்கின்றது. ஸ்தாவரங்களான, புல், பூண்டு, மரம், செடி கொடிகளும், ஜங்கமங்களான பிராணிகளும் அப்பிராணகலை மேன்மேலும் விகாசம்பெறவேண்டி ஏற்பட்ட பல அந்தஸ்த்துக்களாம். *

---

*ஐத்ரேய பிராமணத்திற்கு, வித்யாரண்ணியர் என்று பெயர்பெற்ற சயனாசாரியார் செய்திருக்கும் பாஷியம் பார்க்க.

OFFICE 28 FEB 1911 MADRAS.



2. நாம் வசிக்கும் சிறு கோளமாகிய இந்த லோகத்தில் மாத்திரமும், நம்மனுபவத்தில் உள்ள பிரகிருதி திரவியங்களான பிருதிவி, அப்பு, வாயு, என்பவைகளுடன் சம்பந்தமாக மாத்திரமும், ஈசுவரனின் பிராணகலை வெளிப்பட்டுத் தோன்றுகிறது என்று கருதல் சரியன்று. அறிவுக்கும் பொருத்தமன்று. கோடானகோடி கணக்கிலடங்காத அண்டங்கள் இருக்கின்றன. அவைகளில் ஜீவராசிகள் இருக்கின்றன. தவிரவும், வாயுமண்டலத்திலும் பரவிய விஸ்தாரமான ஆகாசமண்டலத்திலும், நம் புலன்களின் வரம்பை மீறிய நுண்ணிய திரவியங்களால் அமைக்கப்பெற்ற எத்தனையோ லோகங்கள் இருக்கின்றன. அவைகளில் எல்லாம், ஈசுவரனின் குன்றுவில்லாதவும் வற்றுதவுமான பிராணகலை எத்தனையோ ஜீவராசிகளாகப் பரிணமித்துத் தோன்றுகின்றது. மனிதவர்க்கத்தின் இயல்பை, ஒரு அளவுகோலாகக் கொண்டு, ஜீவராசிகளை பல படிகளில் உள்ளனவாக நாம் ஏற்படுத்துவதில், அறிவின் அதாவது பிரஞ்ஞையின் விகாசமுறையில், அவைகள் மனிதனைவிடக் கீழான படிகளில் உள்ளவைகள் எனவும், மனிதனைவிட மேலான படிகளில் உள்ளனவைகள் எனவும, ஆனால் அவைகள் எல்லாம் ஈசுவர அம்சத்தை, ஏற்றத்தாழ்ச்சியாக உடையவை எனவும் நாம் கருதற்பாலன. பல்கிப்பெருகி விர்த்தியாகின்ற எண்ணிறந்த ஜீவராசிகள் சோபானமுறையாக (ஏணிபோன்று) மேல கீழ் எனப் பல படிகளில் இருக்கின்றன. அந்தமகத்தான ஏணியின்கீழ் அதாவது அடிப்பாகம் நம்கண்ணுக்குத் தோன்றும் களேபரமான பிரகிருதி லோகங்களிலும், அதன்மேல் சிரசுபாகம் இந்திரியங்களுக்கு அகோசரமான, ஜோதிஸ் மண்டலத்திலும் மறைந்து இருக்கின்றன. "பிரபஞ்சத்தின் பலபடிகள், கீழே இருந்து ஆரம்பித்து வரவர நம் புலன்களை மீறிய நுண்ணியவைகளாக ஈசுவரன்வரை செல்லுகின்றன".*

3. எல்லா மதங்களிலும், மனிதனைவிட மேலான ஜீவராசிகளைப்பற்றிய பிரஸ்தாபம் உண்டு. அவைகளுக்குப் பெயர்கள் பலவாறாக இருக்கின்றன. ஹிந்து மதத்திலும், பௌத்த மதத்திலும், அஜ்ஜீவர்களை தேவர்கள் அதாவது தேஜோமயசரீரிகளென்றும், யூதர்,

* Tenneyson's In memoriam.

கிறிஸ்துவர், முகம்மதியர்கள் மதங்களில், ஆர்கேஞ்சல், ஏஞ்சல்கள் என்றும், ஜோராஸ்தர்மதத்தில், சப்தஅஷ்மஸ் பண்டாஸ் என்றும் அவர்களுக்குள்ளான பிரோர்ஸ்கள்உட்பட்டத்தேவகூட்டங்கள்என்றும், பல பெயர்கள் வழங்குகின்றன. அநேக மதங்களில், மனிதனுக்கு பிரஞ்ஞை சம்பந்தப்பட்டமட்டில், கீழான ஜீவர்கள் இருக்கிறார்கள் எனப் பிரஸ்தாபமும் உண்டு. அவைகளைப்பற்றி கதைகளிலும், புராணங்களிலும், பல கவிகளிலும் விவரங்கள் இருக்கின்றன. நுண்ணிய உணர்ச்சியுள்ள சிலர் (Sensitive persons) இயற்கையான அழகுள்ள மலைகளையும் காடுகளையும் அருவிகளையும் ஓடைகளையும் பார்க்குங்கால், அவர்கள் திவ்விய திருஷ்டிக்கு, இத்தன்மையான கீழான தேவக்கூட்டங்கள் புலப்படுகின்றன. அவைகள்தான், வனதேவதைக்ள் என்றும், மரதேவதைகளென்றும், பூதகணங்களென்றும், இவைபோன்ற பல பெயர்களால் சொல்லப்படுகின்றன.

4. இயற்கை தர்மங்கள் என்று சொல்லப்பெறும் விதிகளை அனுசரித்து, இந்த தேவர்கள், தேவகணங்கள் ஈசுவரனின் கைங்கரியத்தைச்செய்கின்றவர்கள். இவர்கள் ஈசுவரனின் ஓய்வுஇல்லாமல் பொங்கிவரும் மனச் சங்கற்பத்தை நிறைவேற்றும் பிரதிநிதிகள், வேலைக்காரர்களாம். * ஈசுவரனின் மனோபீஷ்டங்களை முடிக்கின்றவர்கள் இவர்களே.†

இப்பரிசுத்தரான தேவர்கள், சூக்ஷ்மலோகங்களையும், ஸ்தூலபிரகிருதி லோகங்களையும் ஆளுபவர்கள். ஜலத்தில் வஸிப்பவைகளையும், பூமியில் வஸிப்பவைகளையும், ஆகாசத்தில் பறக்கின்றவைகளையும், தாவித்தாவி ஜீவிக்கின்றவைகளையும், கால்நடைப் பிராணிகளையும், இவர்கள் பாதுகாத்துவருகின்றார்கள். ‡ யூதர்களுக்கு நிருபம் எழுதியிருக்கிறவர் கேட்கிறதாவது "இவர்கள் எல்லாம் தேவனின் கைங்கரியம் செய்யும் வேலைக்காரர்கள் அன்றோ?" § யூதர்கள்புத்தகத்தில் சொல்லுகிறதாவது " இத்தேவர்கள் எலிஷா ‖ என்ற ஞானியைக் காத்தார்கள்." "இவ்வுலகம் சிருஷ்டிக்கப்படும்போது, காலை

* Alkoran xxxvii. † Psalms ciii 22.
‡ Visparad Frag i i. § Epistle to the Hebrews. 14.
‖ Kings vi 17

நக்ஷத்திரங்கள் ஒருங்கே கானம்செய்தகாலத்தில், இத்தேவர்களான, ஈசுவர புத்திரர்கள் சந்தோஷித்து ஆரவாரித்தார்கள் "*

ஹிந்து பௌத்தமதக்கிரந்தங்களில், இத்தேவர்களைப்பற்றியும், அவர்கள் சம்பந்தமான லோகங்களைப்பற்றியும் விரிவான பிரஸ்தாபங்கள் இருக்கின்றன. கவுதமபுத்தர் அந்தலோகங்களையும் அந்தலோகவாஸிகளையும் தான் பிரத்தியக்ஷமாக அறிவேன் என்று சொல்லுகிறார். †ஹிந்துமத சாஸ்திரங்களின்படி, சிருஷ்டிகர்த்தர், உலகசம்பவங்கள் நேர்மையாக நடைபெறும் வண்ணம், இத்தேவர்களை மனிதர் சம்பந்தமாக உண்டுபண்ணினர். ஈசுவரசிருஷ்டியில், மனிதர்களுக்குமுன் இத்தேவர்கள் வெளிவந்தார்கள். இவர்களுக்கு பலநாமங்கள் உண்டு. ஆனால் "அவர்கள் சக்திகளும் பிராணன்களும் ஈசுவரனிடமிருந்தே உண்டாயின. பிரகாசமுள்ள இத்தேவர்கள் பரமாத்துமாவேயாம். அந்த பரமாத்துமாவையே அதிஷ்டானமாக உடையர் " ‡உலகில் இராஜாவின் உத்தரவுகள், இராஜாவின் முகர் உள்ளவைகளாய் இருந்துகொண்டு, பல வேலைக்காரர்களால் நடத்தப்படுமாறு போல, இத்தேவர்கள், இறைவனான கடவுளின் ஆஞ்ஞையை நடத்துகிறார்கள். அவர்கள் கொண்டுசெலுத்தும் சக்தியும் அதிகாரமும் கடவுளிடமிருந்தே பெறப்படுகின்றன.

5. முதன்மையில் சிலதேவர்கள், இயற்கையான பிரகிருதி சம்பந்தமான தர்மமுறைகளை (Laws of Nature) நடத்துகின்றவர்கள்; பிற்பாடு, மனிதர்களுக்கு உதவிபுரியும் கைங்கரியங்களைச் செய்கின்றார்கள்; சிலர்கள் மனிதர்களின் பிரார்த்தனைகளைக்கேட்டு, அவைகளுக்கு ஏற்ற உலக சம்பத்துக்களைக் கொடுக்கின்றார்கள். § இவ்வுலகத்தில் தாம்செய்யும் கர்மபலனை இச்சிக்கின்றவர்கள், தேவர்களை ஆராதிக்கின்றார்கள். ஆனால் ஞானியோவென்றால், கர்மபலன் இவ்வுலகத்தைப்பற்றியதாக இருக்கின்றமையாலும், நசுரமாக இருக்கின்றமையாலும், அதைத்தேடாததினால், இத்தேவர்களை ஆராதிக்கிறானில்லை.

---

* Job. xxxviii 7.

† Tevijja Sutta.

‡ மனுஸ்மிருதி xii 119. § பகவத்கீதை iv (12)

6. கிறீஸ்த்மதஸம்பிரதாயத்தில், மூன்றுவகுப்பான தேவதூதர்கள் சொல்லப்படுகின்றார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று உள் வகுப்புக்கள் உள்ளன., 1. ஸிரேபிம் (Seraphim), செருருபிம் (Cherubim), துரோன்ஸ் (Thrones). II. டொமினியன்ஸ் (Dominions) வர்த்தூஸ் (Virtues), பவுர்ஸ் (Powers), III. பிரின்ஸிபாலிடீஸ் (Principalities), ஆர்க்கேன்ஜல்ஸ் (Archangels), ஏன்ஜல்ஸ் (Angels). பிரின்ஸ்பாலிடீஸ் என்பவர்கள், தேசங்கள், ராசாங்கங்கள் இவைகளைப்பாதுகாக்கின்ற தேவர்கள். ஒன்பதாம் வகுப்பினராகிய ஏன்ஜல்ஸ் என்பார் முக்கியமாக மனிதனுடன் சம்பந்தப்பட்டவர்கள்.

7. முகம்மதியர்களுக்குள், ஆர்க்கேன்ஜல்ஸ் (Archangels) அதாவது முக்கியமான தேவதூதர்கள் நால்வகையாகச் சொல்லப்படுகிறார்கள்.

1. கெபிரீல் (Gabriel) பரிசுத்த ஆத்மா. ஞானமுறையை உபதேசிக்கின்றவர்.

2. மைகேல் (Michael) ஜீவரக்ஷகர்.

3. அஸ்ரேயில் (Azrael) மரணத்தை உண்டுபண்ணுகிறவர்.

4. இஸ்ரேபில் (Israfil) புனர் உத்தானம் செய்கிற தேவதூதன்.

தவிரவும், பிரார்த்தனையைக்கேட்டு அருளும் தேவதூதர் என்பவர் ஒருவர் உண்டு. அவருக்கு, ஸாண்டோல்பான் (Sandolphon) என்று பெயர். ஒவ்வொரு மனிதனுக்கும், இரண்டு கணக்கிடும் தேவதூதர்கள் (Recording Angels) உண்டு. கோரான் என்ற மகம்மதியர் சாஸ்திரம் தேவதூதர்களில் கைங்கரியத்தைப் பற்றி வெகுவிஸ்தாரமாகச் சொல்லுகின்றது. அவர்கள், ஈசுவர ஆஞ்ஞைக்கு உட்பட்டு இவ்வுலககாரியங்களை ஆளுகின்றார்கள், கொண்டுசெலுத்துகின்றார்கள். அவர்கள் நூர் (Nur) என்னப்படும் நுண்ணிய அக்கினிமயமான திரவியத்தால் அமைக்கப்பெற்ற சுத்தமான சரீரங்களை உடையவர்கள் என்றும், மனிதர்கள் செய்யும் கர்மங்களைக் கணக்கு எழுதுகிறார்களென்றும், மரணத்திற்குப்பின்பு, சரீரத்தினி

ன்று. ஆத்மாவை பிரிக்கிறார்களென்றும், அவர்களைப்பற்றி சொல்லப்படுகின்றன. முக்கிய தேவதூதனை கேபிரீல் என்பார், தீர்க்கதர்சியான முகம்மத் நபிக்கு தேவஉபதேசங்களைக் கொண்டுவந்தவர். (கிறிஸ்துவர் நூலில், அவ்விதம், வேர்ஜின்மேரி அம்மாளுக்குக் கொண்டுவந்ததாகச்சொல்லியிருக்கின்றது) தவிரவும், கீழான தேவதூதர்களின் வர்க்கங்களைப்பற்றியும், கோரானில் பிரஸ்தாபம் உண்டு. அவர்கள் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சமகாபூதங்களுடன சம்பந்தமுள்ளவர்கள். அவர்களில், நன்மையுள்ளவர்கள், தீமை உள்ளவர்கள் என இருவகுப்பினர்கள் உண்டு. "எங்களில், நன்மை செய்கின்றவர் சிலர், தீமை புரிகின்றவர் சிலர்" அவர்களுடைய ஆராதனையும், அவர்களை நாடுதலும் அங்கீகரிக்கப் பெறவில்லை. அவர்களுடன் சம்பந்தம் தவிர்க்கப்பாலது.*

8. வெண்டிடாட் (Vendidad) என்ற ஜோராஸ்தர் மதசம்பந்தமான கிரந்தத்தில்,† தவிர்த்து எதிர்க்கவேண்டிய தேவர்களின் ஜாப்தா ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஆகாசம், ஜலங்கள், பூமி மரங்கள், கால்நடைகள், இவைகள் சம்பந்தமாக, இவைகளை ரக்ஷிக்கும் தேவகணங்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குபிரோராஸ்(Feroras.) என்று பெயர். (Feroras or Fravashi) மேற்கண்ட பெயர், மனிதனின் ஆத்மாவுக்கும் ரிஷிமதகிரந்தங்களில் உபயோகிக்கப்படுகின்றது.

மனிதனுக்கு மேலான தேவகணங்கள் ஈசுவரன்வரையில் பலபடிகளிலும், மனிதனுக்குக் கீழான தேவகணங்கள் அணுவரை பலபடிகளிலும், இருக்கின்றன. மனிதவர்க்கமும் ஒரு தேவகணமாகவே, கருதப்படுகின்றது.

9. பிரபஞ்சம், அல்லது ஜகத்தானது உயிர் இல்லாத ஜடமான இயந்திரமன்று. அதன் தர்மங்கள் ஜடப்பிரகிருதியின் தர்மங்களல்ல. சேதனத்தன்மை அமைந்தது. உயிரை உடையது. ரஸாயன சக்திகளால் பலமாற்றங்கள் ஏற்படுகின்றனவே எனில், அவைகள், உயிருள்ள சேதன வஸ்துக்களின் காரியமேயாம். நினைப்பாலும், சங்கற்பத்தாலும மூளையின் கண்ணுள்ள திரவியங்கள் நானாவித

* மேற்கண்ட விஷயங்களைப்பற்றி கொரானில் ii 97. 117 lxxix-1-5. vi 60, vii-12-50 (16). lxxvii-1-6. ii-30-96. i-26. lxxii-1-19. பார்க்க.

† vi-9. Yasht xiii. Frag-24. Yasna-xxiii (50)

மான மாற்றங்களைப் பெறுகின்றமை போலவே, லக்ஷியமான கருத்துக்களையும் நோக்கங்களையும் சேதன சக்தியானது உலகத்தில் ரஸாயன சம்பந்தமான பலவாறான வேறுபாடுகள் மூலமாயும் காக்ஷிகள் மூலமாயும், தோற்றங்கள் மூலமாயும், சம்பவங்கள்மூலமாயும் உண்டு பண்ணுகிறது. அச்சேதன சக்தியானது நீக்கமற எங்கும் பரவியுள்ளது. மேலாயும் கீழாயும் உள்ள ஜீவராசிகளுக்குள் மனிதவர்க்கம் மேன்மேலும் மலர்ந்து, விகாசம் பெற்று விளங்குகிறது. மனிதன் இனி, மேன்மேலும் அபிவிர்த்தி யடையும்படியான சக்திகளை தன்னுள் குப்தமாக உடையனாக இருக்கிறான். முன் குப்தமாக மறைந்துள்ள சக்திகளே பின் மலர்ந்து வெளிப்படுகின்றன. அவன் ஒரு பெரிய விரிந்த குலத்தில் சேர்ந்தவன். அவனுக்கு, வயதில் அதாவது உலகவிகாசமுறையில் மேற்பட்டவர்களும், கீழ்ப்பட்டவர்களும், இருக்கின்றார்கள். மேற்பட்டவர்கள் அவனுக்கு உதவிபுரிகின்றார்கள் கீழ்ப்பட்டவர்கள் அவன் உதவியை நாடுகிறார்கள். வியக்கத்தக்கதான, ஆச்சரியமான, ஒன்றோடொன்று சங்கிலிப்பின்னலால் கட்டுண்டு சம்பந்தித்துள்ள பெரிய ஜீவராசிகளின் குடும்பம் நம்முன் தோன்றுகிறது. "ஒன்றே குடும்பம் ஒருவனே தேவன்." மேலும் கீழும், எங்கும் ஈசுவர சைதந்நியம் என்ற தேவாத்மசக்தி ஒன்றே, என்றும் மாறாத ஈசுவரனின் விதியான சங்கற்பத்தைத் தவறாமல் கொண்டு செலுத்தி நடைபெறுகின்றது. மனிதவர்க்கத்திற்குக் கீழான பிராணிகள், ஈசுவரசங்கற்பம் என்ற விதியின் வசமாகி, நடைபெறுகின்றன. அவ்விதியின் அதீனமாகி, சுதந்தரமின்றி வாழ்கின்றன. மனிதனுக்கு மேலான ஜீவர்களான தேவர்கள், ஈசுவர சங்கற்பமென்ற விதியை அனுசரித்து, சந்தோஷமாய், அவ்விதியைக் கொண்டுசெலுத்துகின்றார்கள். சுதந்தரர்களாக இருந்துகொண்டு விதியுடன் நேர்மையாக வாழ்கின்றார்கள். இவ்விரண்டு வர்க்கங்களுக்கு மத்தியில் உள்ள மனிதவர்க்கத்தில் தான், எல்லாப் போராட்டமும், சச்சரவும் சங்கடங்களும் உள்ளன. பரதந்திரர்களான விதிவசமான கீழானவர்க்க ஜீவர்கள், சுதந்தரரான விதியுடன் நேர்மையாக நடைபெறுகின்ற மேலானவர்க்க ஜீவர்கள், இவைகளின் இடை நடுவில் தங்குகின்ற மனிதன், கிரியாசக்தியை அபிவிருத்தி செய்து வருகிறான். அச்சக்தி ஈசுவரனின் ஓர் அம்சம், அச்சக்தி பூர்ணமாய் மலர்தலென்றால், மனிதன் தான் செய்யும் எல்லாக்

கிரியையும் ஈசுவர சங்கற்பத்துடன் முரணுமல், நேர்மையாக நடை பெறவேண்டுமென உணர்ந்து அவ்விதம் அதைக் கொண்டுசெலுத்தற்பாலது. பிதாவின் சங்கற்பத்துடன் புத்திரனுன ஜீவன் நேர்பட நடத்தலிலே, சுதந்திரம் பெறுவர்ன். கடவுள் சொல்லுகிருர் "ஓ! மனிதனே! என் விதிகளை அனுசரித்து நட! என்போல் ஆவாய். பின்பு இவ்விதம் சொல்லுவாய்". அப்படியே இரு. இதோ அப்படியே ஆகிருய். * இவ்விதம் ஒழுகினுல், அதன் பலனுய், உயர்நலம் அமைந்த புருஷோத்தமனின் மஹிமை அவன் மனக்கண்ணில்வெளிப்படும். அம்மஹாபுருஷனின் சரீரத்தில், ஓர் ஓர் சிறு அறையும் ஓர் ஓர் ஜீவராசி உறையிடமாகத் தோன்றும். எல்லாஜீவராசிகளும் ஒரே பிராணனில் கோக்கப்பட்டு இயங்குகின்றவையாகக் காணும். இவ்விதமே, கிறீஸ்துவர்களுடைய நூலிலும் உபதேசித்துள்ளது "சரீரம் ஒன்றே. அதில் பல அங்கங்கள், பலகருவிகள்,கரணங்கள் இருக்கின்றன. அவ்விதமே, கிறீஸ்து எம்பாரும் ஒருவரே†: நீவிர் எல்லாம் அவரின் சரீரமாவிர்கள்; அதில் பல அங்கங்கள், கருவிகரணங்களே! † நான், நீ என்று போராட்டமுள்ள ஜீவர்களாக இருக்கின்ளும், போராட்டம் நீங்கி, எல்லாம் ஈசுவரசங்கற்பத்துடன் நேர்மையாக இயங்கும் தன்மையராக ஆவோமானுல், மனிதத்தன்மை நீங்கி. தெய்வத்தன்மை பெற்று, உண்மையாய் ஈசுவரன் சந்நிதானம் பிரகாசிக்கின்ற உறை இடமாக நாம் ஆவோம். நம் அனுபவத்தில் எல்லாம் ஈசன் செயலாய் முடியும், எல்லாம் ஒற்றுமைப்பட்டு இனி மேன்மேல் விகாசமாகி வரும் உலகங்களைக் கொண்டுசெலுத்தும் தன்மையதாகிய ஒரே காரியமாக நிகழும்.

குறிப்பு:—ஜோராஸ்தர்மதத்தில், 30+3 பெரிய தேவர்கள் உள்ளார் எனவும், ஹிந்துமதத்தில், 33 பெரிய தேவர்கள் உள்ளார் எனவும், கிறீஸ்துவர்களின் நாஸ்டிக்ஸ் (Gnostics) என்ற ஞானிகள் முறையில் 30 மூலதத்துவங்கள், கிறீஸ்து, பரிசுத்த ஆவி, (Holy Spirit) கடவுள், ஆக 33 எனவும் தெளிவாய் வெளியாகின்றன. எண்ணிறந்த பலதேவர் கணங்கள் இருப்பதில், 33 என்ற எண்ணுனது திரும்பத்திரும்ப எதிர்ப்படுதல் கவனிக்கத்தக்கது.

(இன்னும் வரும்.)

ப. நா. அன்னிபெஸன்டு.

---

* Sayings of Mahomed 115. † 1-Corin xii-12-27.

## சூக்ஷ்மசரீரத்தின்கண்ணுள்ள சக்கரங்கள்.

(முன் 124-ம்பக்கத்தின் தொடர்ச்சி.)

### II பொதுப்படையான விஷயம்.

1. முன்பு, ஆகாசதிரவியம் அமைந்த கோசத்தின்கண்ணுள்ள சக்கரங்களைப்பற்றி பிரஸ்தாபித்தோம். அவைகள் அக்கோசத்தின் மேல்பரப்பில், கிண்ணங்கள் போன்ற பள்ளங்களாக இருக்கின்றமையை அறிந்தோம். இந்த சூக்ஷ்மசரீரத்தின்கண்ணுள்ள சுத்த, அசுத்த, மநோமய கோசச் சக்கரங்கள், முந்திய சக்கரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏறக்குறைய நேர்நேராக, ஆனால் கோசத்தின்கண் உள்ளடங்கி இருக்கின்றன. இவைகளும் முன்னவைகளைப்போலவே சுழற்சியான வட்டங்களாம். முன்னவையான ஸ்தூலகோசச் சக்கரங்களின் தொழில் என்னவென்றால், அந்தந்த சக்கரங்களுக்கு நேர் நேராக இசைந்துள்ள சூக்ஷ்மகோசச் சக்கரங்களினின்று அவைகளுக்குள்ள விசேஷங்களைக் கிரகித்து, ஸ்தூல உடலுக்கும் அது சம்பந்தமான, ஸ்தூலப் பிரஞ்ஞைக்கும் (Physical Consciousness) பயன்படும்படி செய்தலாம். இந்த சூக்ஷ்மசரீரச் சக்கரங்கள் கல்விப்பயிற்சியுள்ள ஜாதியார்களின்கண், அதிகமாக விகாசம்பெற்று, வேலை செய்கின்றன. இச்சக்கரங்களைப்பற்றி விரிவாய் விசாரிப்போம்.

2. (1) மூலாதாரத்தின் கண்ணுள்ள சக்கரம்:- இதனிடத்தில் தான், அற்புதமான குண்டலினீ என்று பிரசித்தம்பெற்ற சக்தி விசேஷம் தங்கியுள்ளது. அதுவே, உலோக மாதா எனப்படும். அதைப்பற்றிப் பின்னர் விஸ்தாரமாகச் சொல்லுவோம். இப்போது அது சூக்ஷ்மசரீரத்தின் சக்கரங்களை எவ்விதம் சம்பந்திக்கிறது என்பதைப்பற்றி மாத்திரம் விசாரிப்போம். இதன் சக்தி எல்லா பிரஞ்ஞா பூமிகளிலும் (planes) நிகழ்கிறது. இச்சக்தி விசேஷத்தால், மற்றைய எல்லா சக்கரங்களும் எழுப்பப்படுகின்றன. சூக்ஷ்மசரீரமானது, முதல்முதலில், வியக்தப்படாத, சலநமில்லாத, கனமான உண்டையாக இருந்தது. அப்போது, மிகவும் மலினப்பிரஞ்ஞையுள்ளதாகவும், செயலற்றதாகவும், சுற்றுமுள்ள பிரபஞ்சத்தைப்பற்றித் தெளிவான அறிவில்லாததாகவும் இருந்தது. அச்சமயத்தில், ஆரம்பத்தில் இந்த மூலாதாரச் சக்கரத்தில் உள்ள இச்சக்தி வெளிக்கிளம்பிற்று.

(2) இரண்டாவதான, மணிபூரகம் என்ற நாபிச் சக்கரத்தை அதுநாடிச்சென்றது. அதை எழுப்பி உயிர்ப்பித்தது. அதனால், சூக்ஷ்மசரீரத்திற்கு உணர்ச்சி உண்டானது. வெளியில் உள்ளவஸ்துக்களின் சம்பந்தத்தினால் உண்டாகும் உணர்வு ஏற்பட்டது. ஆனால், பார்த்தல், கேட்டல், என்ற சக்ஷுர் இந்திரியம், சுரோத்திரேந்திரியம் இவைகளின் உணர்வு வியக்தப்படவில்லை.

(3) பின்பு மூன்றுவதான மண்ணீரலில் உள்ள, சக்கரத்தை இந்த குண்டலினி சக்தி நாடிச்சென்றது. இச்சக்கரம் எழுப்பப்பெற்று உயிர்ப்பிக்கப்படவே இதன் மூலமாக, சூக்ஷ்மசரீர முழுமையும் உணர்வுபெற்றது. அதனால், மனிதன், அறிவுடன், நடத்தல் முதலான தொழில்களைச் செய்ய ஆரம்பித்தான். ஆனால், அவ்விதம் நடத்தலினால், உலக விஷயங்களை வியக்தமாக அறிந்தான் இல்லை.

(4) பின்பு இச்சக்தி 4-ம் சக்கரமான ஹிருதயத்தில் உள்ள அநாஹதச் சக்கரத்தை நாடிச்சென்று அதை எழுப்பி உயிர்ப்பித்தது. இதனால், மனிதன் தன்னைப்போன்ற மற்றைய ஜீவர்களுடன், அன்பு பாராட்டவும், அவர்களின் எண்ணங்களை அறியவும் தகைமை பெற்றான்.

(5) பின்பு அவ்விதமே, 5-வது சக்கரமான, கண்டத்தின்கண்ணுள்ள விசுத்திச் சக்கரம் எழுப்பப்பெற்றது. அதனால், சப்தத்தைக் கேட்கும்படியாக சுரோத்திரேந்திரியம் விகாசம் பெற்றது.

(6) அவ்விதமே, 6-வதான, புருவமத்திய சக்கரமான, ஆஞ்ஞா சக்கரம் எழுப்பப்பட்டது; அதனால், நேத்திரேந்திரியம் வெளிப்பட்டது. உலகவிஷயங்களைப் பார்க்கவும் கேட்கவும் யோக்கியதை உண்டானது.

(7) ஏழாம் சக்கரமான, சிரசின் உச்சியில் உள்ள சக்கரம் எழுப்பப்படவே, புவர்லோக சம்பந்தமான உணர்வு பூர்ணம் பெற்றது. எல்லா இந்திரியங்களும் பூர்ண விகாசம்பெற்றன.

3. இந்த ஏழாம் சக்கரம் சம்பந்தமாக, மனிதர்களுக்குள் சில வித்தியாசங்கள் உண்டு. நம்மவர்களில் அநேகருக்கு, சூக்ஷ்மசரீர

சம்பந்தமான 6-ம் 7-ம் சக்கரங்கள், மூளையின் நடுமையத்தில் உள்ள (Pituitarybody) ஓர் கரணத்துடன், சம்பந்தம்பெற்று அதன் மூலமாய் ஸ்தூலசரீரம் மேலான பிரஞ்ஞாபூமிகளுடன் (Higher planes) சம்பந்திக்கின்றன. மற்றையவர்களுக்கோ, 6-ம்சக்கரம்முன் சொன்ன (Pituitary body) என்னும் கரணத்துடன் சம்பந்தித்திருந்தபோதிலும், 7-ம் சக்கரம், அதுவுடன் சம்பந்திக்கிறதில்லை. ஆனல் சொற்பமாகச் சாய்ந்து, இப்போது, அந்தர்கதமாகப் போயிருக்கின்றது. அதுமுக்கண் என்று சொல்லப்படும். (Pineal gland) என்ற, மூளையின் பின்பாகத்தில் உள்ள கரணத்துடன் சம்பந்திக்கிறது. அதனுல்அந்த (Pineal gland)என்ற கரணம் இனித்திரும்பவும் எழுப்பப்பட்டு உயிர்ப்பிக்கப்படும்; அதன் மூலமாய், புவர்லோக சம்பந்தமின்றி நேராகவே ரூபபிரஞ்ஞை நிகழும்சுவர்லோக (Rupa-level of the mental plane, *i. e.*, lower mental) த்துடன் ஜீவன் சம்பந்தம் பெறுவான்.

## III. சூக்ஷ்மசரீர இந்திரியங்கள்.

1. முன் பிரஸ்தாபித்த சூக்ஷ்மசரீரச்சக்கரங்கள் இந்த சூக்ஷ்ம சரீரத்திற்கு, இந்திரியஸ்தானங்களை வகிக்கின்றன. உண்மையில் அவைகள் ஸ்தூலசரீரத்தில் உள்ள இந்திரியங்களைப்போல அல்ல. ஆனல், சூக்ஷ்மசரீரத்தில் பிரஞ்ஞைநிகழும் காலத்தில், அதாவது சூக்ஷ்மசரீரத்தை உபாதியாகக்கொண்டு ஜீவன் நடைபெற்ருல், இவைகள் மூலமாக, இந்திரியங்கள் மூலமாக அநுபவிக்கும் அநுபவங்கள், ஏற்படுகின்றன. சூக்ஷ்மசரீரத்தில், பிரஞ்ஞை நடைபெறுங்கால், அதன் அநுபவத்திற்கு, வியக்தமான, சூக்ஷ்மஇந்திரியங்கள் வேண்டுவதில்லை. சூக்ஷ்மசரீர திரவியங்கள் சூக்ஷ்மசரீரம் முழுமையும் இருக்கின்றமையால், அந்நிலையில் உள்ளவன் முன், பின், மேல், கீழ் எல்லாப்பக்கங்களையும் பார்க்கவும், எல்லாப்பக்கங்களினின்று கேட்கவும் கூடும். ஆகையால் இச்சக்கரங்கள் உண்மையில் இந்திரியங்கள் ஆகா; அவைகளின் மூலமாக நேரில் ஒருவன், கேட்டல், பார்த்தல், முகர்தல் முதலிய அநுபவங்களைப் பெறுகிருன் இல்லை. ஆனல், இச்சக்கரங்கள் உயிர்ப்பிக்கப்பெற்றமையால் தான் சூக்ஷ்மசரீரத்தின் பிரஞ்ஞை நிகழ்வதாகிறது; இச்சக்கரங்கள் ஒவ்வொன்றும் விகாசம்பெற, புதிய புதிய பிரஞ்ஞா அலைகளை அறியும் சக்தியை இந்த சூக்ஷ்மசரீரம் பெறுவதாகும்.

2. ஸூக்ஷ்மசரீர சம்பந்தமான திரவியங்கள், கொதிக்கின்ற ஜலத்தின் திரவியங்கள்போல, சுற்றிச், சுழன்று ஓடிக்கொண்டே இருக்கின்றன. அதனால், எல்லாத்திரவியங்களும், ஒவ்வொரு சக்கரத்துடனும் சம்பந்தம்பெற்று, அந்தந்தச்சக்கரத்தின் சலநகதியை அடைகின்றன. சரீரத்தின் எல்லாப்பாகங்களிலும், பிரஞ்ஞை நிகழ்கின்றது, உணர்வு உண்டு, ஆனால் அவ்வுணர்வை, ஸ்தூலசரீர சம்பந்தமான பிரஞ்ஞா பூமிக்கு கொண்டுவருதல் முடியாது.

## IV ஸ்தூல சம்பந்தமான சக்கரங்களின் எழுச்சி.

1. ஸூக்ஷ்ம சரீர சக்கரங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு எழுங்காலத்தில், ஸ்தூல சரீரப்பிரஞ்ஞை சம்பந்தப்பட்ட மட்டில் மனிதன் ஒன்றும் அறியான்; ஸ்தூலசரீரமானது ஸூக்ஷ்ம சரீரச் சக்கரங்களின் எழுச்சியால் யாதொரு பிரயோஜனத்தையும் அடைகிறதில்லை. அது பிரயோஜனத்தை அடையவேண்டுமானால், ஸூக்ஷ்ம சரீர சக்கரங்களை குண்டலினி சக்தி மூலமாய் எழுப்பியதுபோல ஆகாசதிரவியத்தி (Etheric matter) னால் மூடப்பெற்றுள்ளதும் மூலாதாரத்தின்கண் உள்ளதுமான குண்டலினி சக்தியை எழுப்பி அதன் மூலமாய் ஸ்தூல சக்கரங்களை எழுப்பவேண்டும்.

2. ஒரே பிடியாய் தீவிரமாய் மூலாதாரச் சக்கரம் எழவேண்டுமென்று சங்கற்பிக்கவேண்டும். அதனால் தூங்கியிருக்கும் குண்டலினி சக்தியை எழுப்புவதாகும். அது எழவே, அதனுடைய அபாரமான சக்தி விசேஷத்தால் மற்ற சக்கரங்கள் உயிர்ப்பிக்கப்படும். இவ்விதம் மற்ற சக்கரங்கள் எழுப்புவிக்கப்படுமாகில், ஸூக்ஷ்ம சக்கரங்களில் எழுப்பப்பட்ட சக்திகள் அததற்கு நேரான ஸ்தூல சக்கரங்கள் மூலமாய் ஸ்தூல சரீரத்துடன் சம்பந்திக்கும். அந்த ஸ்தூல பிரஞ்ஞையின் வரம்புக்குள் அமைவுறும்.

3. நாபியினிடத்திலிருக்கின்ற 2-வது சக்கரம் எழுப்பப்படவே, புவர்லோக சம்பந்தமான விஷயங்களைப் பொதுப்படையாக மனிதன் உணருவான். சிலர்களை சிநேகமாகவும், சிலர்களைப் பகையாகவும், சிலவைகளை ரம்மியமாகவும், சிலவைகளை வெறுப்பாகவும், பொதுப்படையாய்த் தெரிந்துகொள்ளுகிறான். ஆனால் அப்படி நிகழ்வதற்கு உண்டான காரணத்தை அறிகிறானில்லை.

4. மூன்றாவதான மண்ணீரலிலுள்ள (Spleen) சக்கரம் எழுப்பப்படுமாகில் புவர்லோகத்தில் தான் செய்த யாத்திரைகள், சிறுபான்மையேனும், விபக்தமில்லாமல் பொதுப்படையாய் ஸ்மரணைக்குக் கொண்டுவருவான். சிலசமயத்தில் இச்சக்கரத்தைச் சற்று எழுப்பினனாகில் ஆகாயத்தில் பரந்த அநுபவத்தை அரைகுறையாகவாவது ஞாபகத்திற்குக் கொண்டுவருவான்.

5. நாலாவதான ஹிருதய சக்கரம் உயிர்ப்பிக்கப்பட்டு எழுமாகில் பிறருடைய சுக துக்கங்களைத் தானே உணருவான். சிலசமயங்களில் அவ்வுணர்ச்சியால் பிறர் வாதனைகளையும் துன்பங்களையும் தன்னுடைய ஸ்தூல சரீரத்தில் தானே நேராகஅநுபவிப்பான்.

6. கண்டத்திலுள்ள 5-வது சக்கரம் உயிர்ப்பிக்கப்பட்டு எழுமாகில், அசரீரி வாக்கைக் கேட்பான். சிலசமயத்தில் அசரீரியான சங்கீதத்தையும் இனிமையான சப்தங்களையும் கேட்பான். இச்சக்கரம் பூர்ணமாக எழுப்பப்பட்டுத் தொழில் செய்யுமாகில், ஸ்தூலசூக்ஷ்ம பிரஞ்ஞா பூமிகளில் நிகழும் சப்தங்களைக் கேட்கும்படியான தகைமையைப் பெறுவான்.

7. ஆறாவதான புருவமத்திய சக்கரம் உயிர்ப்பிக்கப்பட்டு எழுமாகில், பலவிதமான காக்ஷிகளைக் காண்பான். ஆரம்பத்தில் அக்காக்ஷிகள் மங்கலாகவும் வியக்தப்படாமலும் தோன்றும். மேற்படி சக்கரமானது பூர்ணமான விகாசம் பெறும்பக்ஷத்தில், சூக்ஷ்ம திருஷ்டியைப் பெறுவான். இந்தச் சக்கரமானது நேத்திர இந்திரியத்துடன் இன்னும் வேறு ஒருவிதமாய் சம்பந்தித்து இருக்கிறது. அதாவது:—சிறிய நுண்ணிய வஸ்துவைப் பெரிதாகக் காணும் தன்மை நேத்திர இந்திரியத்துக்கு ஏற்படுகிறது. இந்தச்சக்கரத்தினின்று பாம்புபோன்று வளைந்த ஆகாசதிரவியத்தால் அமைந்த நுண்ணிய ஒரு குழாய் கிளம்புகின்றது. அதின் மற்ற நுனியில் ஒரு துவாரம் ஏற்படுகின்றது. இந்தக் குழாயானது பூதக்கண்ணாடிபோன்று தொழில் செய்கிறது. வெளிப்புறமாய் உள்ள துவாரமானது குறுகுதலும் விரிதலுமாக இருக்கிறது. பழைய சாஸ்திரங்களில் ஒருவன் தலைனை அணுவாகவும், மகத்தாகவும் செய்துகொள்ளும் சித்தியானது இக்குழாயின் மூலமாய் ஏற்படுகிறது.

ஒரு அணுவை ஆராய்ச்சி செய்யவேண்டுமானால், இந்தத் துவாரத்தை அதற்கு ஏற்பப் பெரிதாய்ச் செய்துகொள்ளல்வேண்டும்.

(8) ஏழாவது சக்கரமான சிரசின்மத்தியில் இருக்கின்ற சக்கரமானது எழுப்பப்படவே அச்சக்கரத்தின் வழியாக, பிரஞ்ஞையுடன் ஸ்தூலசரீரத்தை விட்டு வெளிக்கிளம்பவும், பிரஞ்ஞை தப்பாமல் அச்சரீரத்தில் திரும்ப நுழையவும், கூடும். இரவிலும் பகலிலும் பிரஞ்ஞை இடையறாது தொடர்பாய் நடைபெறும். ஒரு வரிசையாக (இவ்வரிசைமுறை சில ஜனங்களுக்கு வித்தியாசப்படும்) இச்சக்கரங்களில் குண்டலினி அக்கினியைப் பிரவேசிக்கும்படிசெய்தால், ஒருவன் பூலோகம் விட்டுப் புவர்லோகசஞ்சாரம் செய்யவும், ஸ்வர்க்கலோகம் நுழையும்வரை இடைவிடாமல்தொடர்பாய் பிரஞ்ஞையுடன் நடைபெறுவான். இவ்விஷயம் தூங்குகிற காலமாயிருந்தாலும், மரணமான காலமாக இருந்தாலும், இரண்டிற்கும் வித்தியாசமில்லாமல், ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. இத்தன்மையான அநுபவம் நேரிடுவதற்குமுன் புவர்லோக அநுபவங்களை அநேக சமயங்களில் அநுபவித்து இருத்தல் வேண்டும். அப்படி அநுபவிக்கிறதில், குண்டலினி சக்தியை எழுப்பாமலே ஒன்று இரண்டு சக்கரங்கள் தாமே தீவிரமானசலனம் பெற்று அச்சலனத்தின் மூலமாய் சூக்ஷ்ம திருஷ்டி ஏற்படும். ஆனால் அச்சூக்ஷ்ம திருஷ்டி சொற்பகாலம்தான் நிகழும்.

(இன்னும்வரும்)

ப. நா.

C. W. L.

## நன்மொழி.

(65) எண்ணித்துணிக கருமம்—மற்றுத்
துணிந்தபின், எண்ணுவமென்பது இழுக்கு.

(66) ஒரு தேசத்தார் நலம் பெற வேண்டுமானால், அத்தேசத்தின் ஜனங்கள் ஒவ்வொருவரும் நற்குணம் பெறவேண்டும். அந்நற்குணம் நற்செய்கை, நல்லசித்தவிருத்தியால்உண்டாகும். நல்ல சித்தவிருத்தி, நற்சகவாசத்தாலும் நற்படிப்பாலும், இறைவனிடம் அன்பின் மிகுதியாலும் உண்டாகும்.

# பிரஹ்மஞான சபை.

---

இச்சபை 1875-ம் வருஷம் நவம்பர் மீ 17உ அமெரிக்காவில், ஐக்கியமாகாணத்தின்கண்ணுள்ள, நியூயார்கு என்னும் நகரில் பிளவாட்ஸ்கி என்னும் அம்மையாரையும் ஸ்ரீமான் கர்னல் ஆல்காட்டு என்பாரையும் உலகத்தில் முன்னிறகச்செய்து நம்முடைய இந்தியா தேசத்தின் வடக்கிலுள்ள ஹிமாசலவாஸிகளாகிய இரண்டு மஹரிஷிகளால் ஸ்தாபிக்கப்பெற்றது. இந்தச்சபை ஒருமதத்தைச் சார்பாகஉடைத்ததன்று: எல்லாமதமும்இதற்குச்சம்மதமே. இதன் அங்கத்தினர்கள், உலகில் வழங்கும் பலமதஸ்தர்களாவர். உண்மையை ஆராய்ந்து அறிதலே அவர்கள் கடைப்பிடி. ஞானமுறையில், ஜனசமூகத்திற்கு உதவிபுரிதலே, அவர் தலைமேற்கொண்ட தொழில். நாஸ்திகவாதத்தை தொலைத்தலும், ஆஸ்திகதர்மம் உலகத்தில் மேன்மேலும் விஸ்தாரமாக நடைபெறவேண்டுவதற்குரிய முயற்சியை நாடுதலும் அவர்கள் வேலை. இச்சபையின் பிரஸித்தமான நோக்கங்களும், லக்ஷியங்களுமாவன:—

1. ஜாதி, சமயம், வர்ணம், முதலிய வேற்றுமையை கவனியாமல், ஜனசமூகத்தில் சகோதரதர்மமும், சிநேகமும் நிகழவேண்டும். ஆண்பாலர், பெண்பாலர் என்ற வேற்றுமை, வைஷ்ணவன், சைவன், கிறீஸ்துவன், முகம்மதியன், முதலிய சமயவேற்றுமை, இந்தியன், இங்கிலீஷ்காரன், ஐரோபியன், கருத்தநிறத்தவன், வெள்ளைநிறத்தவன், முதலியவேற்றுமை, பிராஹ்மணன், க்ஷத்திரியன் வைசியன், சூத்திரன், முதலியவேற்றுமை, இவைபோன்ற வேற்றுமைகளையும், அவைகளால் உண்டாகும் துவேஷத்தையும் குறைக்கவும், நாளடைவில் பொய்த்துப்போகும்படி செய்தலும், வேண்டும்.

> "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்
> நன்றேநினைமின், நமனில்லை" திருமூலர்.

2. (a) பலசமயநூல்களை ஒப்புநோக்கி ஆராய்தலும், கற்றலும், அதனால், சாமாந்நிய உண்மைகள் எல்லாமதங்களுள்ளும் ஒரேதன்மையனவாக இருத்தலை அறிதலும் வேண்டும்.

> "வேறுபடும் சமயமெல்லாம் புகுந்துபார்க்கில்
> மாறுபடும் கருத்தில்லை" தாயுமானவர்.

அவரவர் பிறந்துள்ள மதத்தின் உண்மைகளை அறிந்து, அவ் வுண்மைகளை அனுஷ்டிக்க முயலவேண்டும். ஒருமதத்தினரைவேறு மதத்திற்கு மாற்றுதலும் அதுசம்பந்தமான செயல்யாவும் தீயவை என்றும், ஈசுவரசம்மதமல்லவென்றும் ஒவ்வொருவரும் உணரப்பாலது. அவரவர் பிறந்துள்ள சமயம் "அவர் அவர் விதிவழியடைய நின்றனர்" என அறியத்தக்கது.

(b) சமயநூல்களின் ஆராய்ச்சியுடன், சாஸ்திரங்களின் ஆராய்ச்சியும் செய்யவேண்டும். அதனால்தான், சந்தேகங்கள் தெளியும், நன்னம்பிக்கை உண்டாகும்.

3. மனிதனிடம் குப்தமாக மறைந்துள்ளசக்திகளை, பலஞான முறைகளின் அப்பியாசத்தால் வெளிப்படுத்தல், மலரும்படி செய்தல்வேண்டும். யோகசாஸ்திரத்தில், பலசித்திகள்பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவைகளை ஆராய்ந்து அவரவர் திறமைக்கும், சௌகர்யத்திற்கும் ஏற்ப, தவம் முதலிய அனுஷ்டானம்கொள்ளுதல் நலமாம்.

எம்மதஸ்தரும் எச்சாதியாரும், எவ்வருணத்தாரும், ஆண்பெண் என்ற எப்பாலரும் இச்சபையில் அங்கத்தினராகலாம். அவர்கள் ஒருங்குசேர்தலுக்குக் காரணம், ஒரேதன்மையான மதக்கொள்கையன்றும். தத்துவ(உண்மை) ஆராய்ச்சி ஒன்றே அவர்கள் பொது நோக்கமாம். சத்தியத்தை நாடுதலே அவர்கள் கருத்தாம். 'சத்தியத்தைவிட மேல் தர்மம் இல்லை" என்பதே அவர்கள் தீர்மானமாம். தபஸினாலும் படிப்பினாலும், நல்லொழுக்கத்தினாலும் உயர்நலம் அமைந்த லக்ஷியத்தில் கவனம் வைப்பதாலும், இச்சத்தியம் அடையப்பாலது. எங்கும் சாந்தமும் சமாதானமும் நிகழவேண்டுமென்பது அவர்கள் விருப்பமாம்.

"ஆனசமயம் அது இது நன்றெனும்
மாயமனிதர் மயக்கம் அது ஒழி
கானம்கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உருவது ஆமே."

பிறர்மத சகிப்புள்ளவனும், ஜனசமூகத்தில் சாந்தமும் சமாதானமும் சிநேகமும் நடைபெறவேண்டுமெனக் கருதுவானும், உண்மையை உணரவிரும்புவானும், அதில் முயலுவானும் இச்சபையின் அங்கத்தினராக இருத்தலுக்கு உரியராவர். ஓம் தத் ஸத் ஓம்.

ப. நாராயணன்.

# மகாலயபட்சமும் நவராத்திரியும்.

(முன் 268-ம் பக்கத் தொடர்ச்சி.)

(2) இவ்வுலகத்தில் பிரவிர்த்தியை உடையவர்களாய் காம்ய கிருத்தியங்களை வகிக்கும் ஜீவர்கள் அவரவர்கள் அபே க்ஷிக்கும் காம பலன்களை யடைவதற்கு கன்னியை அடைந்த சூரியன் மூலமாக, மாயா அவச்சின்னனாகிய ஸகுணேசுவரனை ஆராதிக்கின்றார்கள். அந்த ஆராதனைக்கு (கந்த்ராமஹே தேவஸவிதாரம்) கன்னியும் சூரியனும் சேருகின்ற புரட்டாசிமாசமே உசிதமாகக் கருதப்பட்டகாலம். இந்த ஆராதனை புத்தியினால் அதாவது "சிரத்தை" யோடு அனுஷ்டிக்கப்படவேண்டியதாகையால் புத்திக்கு அதிஷ்டான சக்தியாகிய புதனுக்கு கன்னியை ஆட்சிவீடாகவும் மூலத்திரிகோணவீடாகவும் சொல்லப்படுகிறது. இம்முறையாகவே ஞானத்தைக் குறிக்கின்ற தனுசில் சூரியன் இருக்கும்பொழுது (வாவம்மஹே தேவவிஷ்ணும்) அதாவது மார்கழிமாசமானது நிஷ்காமமாகிய உபாசனைக்குரிய காலம். இந்த உபாஸனை ஞானத்தினால் அதாவது "வித்தை" யோடு அனுஷ்டிக்கப்படவேண்டியதாகையால் ஞானத்துக்கு அதிஷ்டான சக்தியாகிய பிரகஸ்பதிக்கு தனுசை ஆட்சி வீடாகவும் மூலத்திரிகோண வீடாகவும் சொல்லப்படுகின்றது. அந்தக் காரணத்தினால் "மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்" என்று கீதாசாஸ்திரத்தில் பகவான் மார்கழிமாசத்தை மேன்மைப்படுத்திக் கூறுகின்றார். ஸ்தூலமாயமைந்த பிரதீக ஆராதனை முறையிலும், தனுர்மாச பூஜையும், ஆருத்திராதர்சனமும், வைகுண்ட ஏகாதசியும் மார்கழிமாசத்தில் அனுஷ்டிக்கப்படுவதைக் காண்கலாம். பன்னிரண்டு ராசிகளையும் அத்தியாத்ம திர்ஷ்டிஸ்தானத்தில் அதிபௌதிக திர்ஷ்டிவைத்துப் பார்த்தால் பிரம்மாண்டம் முழுவதும் ஹிரண்ணியகர்ப்பனுடைய சரீரம் அவருடைய சக்தியானது பல பதங்களாகப் பிரிந்து பிரம்மாண்ட முழுமையும் வியாபித்திருக்கின்றது. அந்தசக்திகள்ஒவ்வொன்றும் பிரவிர்த்தித்துச்செல்லுவதற்குமார்க்கமும் காலப்பிரமாணமும் ஏற்பட்டிருக்கின்றன. பிரம்மாண்டத்தினுடைய அவயவங்களை பன்னிரண்டுராசிகளாகியஸ்தானங்கள் சங்கேதமாகக்குறிக்கின்றன. அந்த ஸ்தானங்களின் வழியாகஅந்த சக்திகளு

க்கு நம்முடைய பிராணவாயுபோலப் போக்குவரத்தாகிய சஞ்சாரமும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவைகள் சஞ்சரிக்கையில் சகல சராசரங்களும் அவைகளால் பாதிக்கப்பட்டு பல விகாரங்களுக்குள்ளாகி சுகதுக்க பேதமான போகங்களை நாடுகின்றார்கள். அந்த பின்ன சக்திகளை கிரகித்துக்கொண்டு, உலகத்திலுள்ள சராசரங்களை ஆண்டு நடத்த அதிகாரம்பெற்ற தேவதைகள் அனந்தமானவர்கள். அவர்களுக்கு "கிரகம்" என்று பெயர். பிரதான புருஷனுக்கு இயற்கையான சக்திபேதங்களை "கிரகித்து" க்கொண்டு அவர்கள் நடப்பதால் "க்ரஹ்" என்னும் தாதுவிலிருந்துபிரதிநிதி (Agent or Deputy) என்கிற அர்த்தத்தில் அவர்களுக்கு 'கிரகம்' என்னும் நாமம் அமைந்திருக்கிறது. அவர்களில் முக்கியமானவர்கள்:

1. சூரியன் - ஆத்மா.

2. சந்திரன் - மனம்.

3. இராகு - மனத்தின் சங்கற்பம் விகற்பம் என்னும்தோற்றங்களில் ஒன்று.

4. கேது - அவைகளில் மற்றொன்று.

5. செவ்வாய் - அதிஷ்டானமாகிய பிராரப்தம்.

6. புதன் - புத்தி.

7. குரு – ஞானம்.

8. சுக்கிரன் - போக இச்சை.

9. சனி – மரணம்.

(3) இராசிகளுக்கு முன் சொல்லியபடி சங்கேதமான அர்த்தங்களுள்ள பெயர்கள் அமைந்த பின்னர், அந்தப் பெயர்களால் சாமான்னியமாய்க் குறிக்கப்படும் பதார்த்தங்களின் வடிவங்கள் இராசிகளுக்கு அமைக்கப்பட்டுள்ளன. அந்தவடிவங்களுக்கு அர்த்தமில்லை. வாஸ்தவத்தில் ராசிகள் வியவஸ்திதமான பொருள்களுமல்ல, சங்கேதமான கல்பனையாதலால் அவைகளுக்கு வடிவமுமில்லை.

ஆகவே, மேலே விவரித்தபடி ஆத்மாவுக்கு பிரேரகனான சூரியன், புத்திக்குப் பிரேரகனான புதன் வீடாகிய கன்னியிலிருக்கும் காலம் அதாவது புரட்டாசி மாசமானது காம்மியமான ஆராதனைகளுக்குப் பொருத்தமான சமயமென்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது.

4. மானிடர்களால் ஆராதிக்கப்பட்டு அவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் அதிகாரத்தை வகித்தவர்கள் இரண்டு வகுப்பினர்.

1. பிதுர்க்கள்.
2. தேவர்கள்.

மகாலயம் என்பது பிதுர்க்களின் ஆராதனை. இவர்கள் தூம மார்க்க அபிமானிகள். இவர்களுடைய ஆராதனைக்கு கிருஷ்ணபட்சம் பொருந்தியது. இவர்கள் ஐந்துவகையினர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | புரூரவர்கள் | விச்வேதேவர். |
| 2. | ஆர்த்ரவர் | |
| 3. | வஸு | பிதுர்க்கள். |
| 4. | ருத்ரர் | |
| 5. | ஆதித்தியர் | |

இவர்களில் விச்வேதேவர்கள் பிதுர்க்களுக்கு ஆதாரமுள்ளவர்கள். அவர்களை முதலில் ஆராதித்தபின்புதான் பிதுர்க்களை ஆராதிக்கவேண்டியது. பிதுர்க்கள் விச்வேதேவர்களை விட்டு எக்காலத்திலும் பிரிந்திருக்கமாட்டார்கள். இவர்கள் புவனத்திலுள்ள எல்லா தேவதைகளுடைய அம்சத்தையும் கைக்கொண்டு விளங்குகிறவர்கள். அதனால்தான் அவர்களுக்கு விச்வ எல்லாம் என்னும் பகுதியுடன்கூடி எல்லாத் தேவர்களும் அடங்கியவர்கள் என்று பொருள்படுகின்ற நாமமானது கொடுக்கப்பட்டிருக்கிறது.

"வஸு" என்னும் சொல் வஸ் (Vas)என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அதற்குக் கூடவசித்தல் அல்லது இருத்தல்என்று பொருள். ஸ்தூலதேகம் ஒழிந்தவர்களாயினும் சூக்ஷ்ம தேகத்துடன் நம்முடைய பக்கத்திலிருந்து நம்முடைய க்ஷேமத்தை கவனித்துக்கொண்டு நம்மைக் காப்பாற்றி வருகிறவர்கள்.

ருத்திரர் = ருஜ: + த்ராவயதி என்னும் தாதுக்களின் சேர்க்கையினால் நம்முடைய துன்பங்களையெல்லாம் அகற்றிக்கொண்டு நமக்கு அனுக்கிரகம் செய்கின்றவர்கள் எனப் பொருள்படுகின்ற பெயரையுடையவர்கள்.

ஆதித்யர்—ஸ்வபிரகாசத்தினுல் எப்பொழுதும் விளங்குகிறவர்கள். இவர்கள் நமக்கு நல்ல அறிவையும் ஞானத்தையும் கொடுத்து காப்பாற்றுகிறவர்கள்.

(5) பிதுர் கிருத்தியங்களில் நாம் ஆராதிக்கும் மூன்றுபிதுர்வர்க்கங்களில் நமக்கு சமீப முறையுள்ளவர்கள் வஸுவினிடத்திலும் அதற்கு அடுத்தவர் ருத்ரரிடத்திலும், அதற்கடுத்தவர் ஆதித்யரிடத்திலும் அந்தர்கதமாகி அந்தந்த தேவதைகளுடைய பிரஸாதத்தை நமக்கு வாங்கித் தருகிருர்கள். ஆகையால்தான் அம்மூவர்களையும் அந்த தேவதைகளின் ரூபமாக நாம் ஆராதிக்கின்ருேம்.

அந்த ஐந்துவகை தேவதைகளும் மகாலயபக்ஷ காலத்தில் சமஷ்டி சக்தியாகிய மாயாவிசிஷ்ட ஹிரண்ணியகர்ப்பனுடைய பிரதிநிதியான கன்னியையடைந்த சூர்யனிடத்தில் லயமாகி குறைதலையடைந்த தங்கள் தங்களுடைய சக்திகளைப் பூர்ணப்படுத்திக் கொள்ளுகிருர்கள். அந்தக்காலத்தில் செய்யப்படும் ஆராதனையானது சமஷ்டி சக்தியாகிய ஹிரண்ணியகர்ப்பன் அல்லது சூரியனை திருப்திசெய்து அவர்களுக்குள் அந்தர்கதமாகின்ற எல்லா பிதுர்க்களையும் திருப்தியடையும்படி செய்கின்றது. அந்த ஆராதனை மேலேகண்ட மூன்றுவித பிதுர்க்களோடுகூட, இறந்துபோன எல்லா உறவினர்களுக்கும் செய்யப்படுகின்றது. மற்றக்காலங்களில் செய்யப்படும் ஆராதனையைக் காட்டிலும் மஹாலயபக்ஷ ஆராதனையானது விசேஷமான பலனை அளிக்கும் பான்மையுடையது.

(6) அவ்விதமாகவே நவராத்திரி உபாஸனையும் கொண்டாடப்படுகிறது. மேலேகண்ட ஐந்துவிதமான பிதுர்தேவதைகள் தவிர மற்ற தேவர்களெல்லாம் சுக்லபக்ஷ அபிமானிகள் ஆகையால் புரட்டாசி மாதம் சுக்லபக்ஷத்தில் அவர்களுக்காக நவராத்திரி ஆராதனை அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த ஆராதனையில் பராசக்தியாகிய சமஷ்டி சக்திரூபமே பிரதான தேவதையாகவும் பின்னசக்திகளை வகிக்கும் மற்ற எல்லா தெய்வங்களையும் அங்க தேவதைகளாகவும் கொண்டு உபாஸிக்கின்ருர்கள். அவ்விதமாக நவராத்திரி காலத்தில் பின்ன சக்திகளெல்லாம் பூர்ண சக்தியில் அந்தர்கதமாகின்ற முறையைத் தான் தேவிமாகாத்மியம் இரண்டாவது அத்தியாயத்

தில் அடியில் கண்டவாறு எல்லா தேவதைகளும் அவரவர்களுடைய சக்திகளை சமஷ்டி சக்தியாகிய பரதேவதை இடத்தில் ஒப்பிவித்தார்கள் என ஸ்தூலமாகச் சொல்லப்படுகிறது.

அதாவது:—ஶூலம்ஶூலாத்விநிஷ்க்ருஷ்ய ததௌ தஸ்யை பிநாகத்ருக் சக்ரஞ்ச தத்தவாந் க்ருஷ்ணஃ ஸமுத்பாட்ய ஸ்வசக்ரதஃ ஶங்கஞ்ச வருணஶ்ஶக்திம் ததௌ தஸ்யை ஹுதாஶநஃ மாருதோ தத்தவாஞ்சாபம் பாணபூர்ணே ததேஷுதீ வஜ்ரமிந்த்ரஃ ஸமுத்பாட்ய குலிஶாதமராதிபஃ ததௌ தஸ்யை ஸஹஸ்ராக்ஷோ கண்டாமைராவதாத்கஜாத் காலதண்டாத்யமோ தண்டம் பாஶஞ்சாம்புபதிர்ததௌ ப்ரஜாபதிஶ்சாக்ஷமாலாம் ததௌ ப்ரஹ்மா கமண்டலும் ஸமஸ்தரோமகூபேஷு நிஜரஶ்மீந் திவாகரஃ காலஶ்ச தத்தவாந் கட்கம் தஸ்யாஶ்சர்ம ச நிர்மலம் க்ஷீரோதஶ்சாமலம் ஹாரமஜரே ச ததாம்பரே சூடாமணிம் ததா திவ்யம் குண்டலே கடகாநி ச அர்த்தசந்த்ரம் ததா ஶுப்ரம் கேயூராந்ஸர்வபாஹுஷு நூபுரௌ விமலௌ தத்வத் க்ரைவேயகமநுத்தமம் அங்குலீயகரத்நாநி ஸமஸ்தாஸ்வங்குலீஷு ச விஶ்வகர்மா ததௌ தஸ்யை பரஶும் சாதிநிர்மலம் அஸ்த்ராண்யநேகரூபாணி ததாபேத்யஞ்ச தம்ஶநம் அம்லாநபங்கஜாம் மாலாம் ஶிரஸ்யுரஸி சாபராம் அததஜ்ஜலதிஸ்தஸ்யை பங்கஜஞ்சாதிஶோபநம் ஹிமவாந் வாஹநம் ஸிம்ஹம் ரத்நாநி விவிதாநி ச ததாவஶூந்யம் ஸுரயா பாநபாத்ரம் தநாதிபஃ ஶேஷஶ்ச ஸர்வநாகேஶோ மஹாமணிவிபூஷிதம் நாகஹாரம் ததௌ தஸ்யை தத்தே யஃ ப்ருதிவீமிமாம்

இதன்பொருள்—எல்லா தேவதைகளும் அவரவர்களுடைய ஆயுதம் முதலிய பதார்த்தங்களில் காப்பாற்றிவைக்கப்பட்டிருந்த சக்திகளை அவரவர்கள் ஆகர்ஷித்து எடுத்து பராசக்தியினிடத்தில் கொடுத்ததாக ஏற்படுகிறது. அதாவது,

(1) சூலத்திலிருந்து பரமசிவனும்

(2) சக்கிரத்திலிருந்து நாராயணனும்

(3) சங்கத்திலிருந்து வருணனும்

(4) சக்தியிலிருந்து அக்கினிதேவனும்

(5) சாபம் முதலியவைகளிலிருந்து வாயுவும்

(6) வஜ்ஜிராயுதத்திலிருந்தும் ஐராவதத்தின் மணியிலிருந்தும் இந்திரனும்

(7) காலதண்டத்திலிருந்து யமனும்

(8) பாசத்திலிருந்து அம்புபதியும்,

(9) அக்ஷமாலையிலிருந்து பிரஜாபதியும்

(10) கமண்டலத்திலிருந்து பிர்ம்மாவும்

(11) ரோமகூபங்களிலிருந்து சூரியனும்

(12) கட்கம் முதலியவைகளிலிருந்து காலனும்

(13) ஹாரம் முதலியவைகளிலிருந்து பாற்கடலும்

(14) பரசு முதலியவைகளிலிருந்து விசுவகர்மாவும்

(15) தாமரைப் புஷ்பத்திலிருந்து ஸமுத்திர தேவனும்

(16) சிம்ம வாஹனத்திலிருந்து ஹிமவானும்

(17) ஸுரா பாத்திரத்திலிருந்து குபேரனும்

(18) அவ்விதமாகவே மற்ற தேவதைகளும் அவரவர்களுடைய பின்ன சக்தி விசேஷங்களை ஆகர்ஷித்து கொடுத்தார்கள்.

(7) அப்படி அவ்விதமாக சக்திகளையெல்லாம் தன்னிடத்தில் லயமாகச் செய்துகொள்ளுகிற பராசக்தியானவள் ஒன்பதுரூபமாக இருப்பதால் அந்த ரூபங்களில் ஒரு ரூபம் பிரதானமாகவும் மற்ற எட்டு ரூபங்கள் பரிவாரம் அல்லது அங்கமாகவும் இருக்கிறார்கள். அந்த ஒன்பது ஸ்வரூபங்களாவன:—

(1) மாஹேச்வரீ

(2) கௌமாரீ

(3) வாராஹீ

(4) மஹாலக்ஷ்மீ

(5) வைஷ்ணவீ

(6) ஐந்த்ராணீ

(7) ப்ராஹ்மீ

(8) நாரஸிம்ஹீ

(9) சாமுண்டீ

ஒன்பது சக்திகளாக ஆவிர்பாவமாகின்றது.

(8) நவராத்திரி ஒன்பது நாட்களிலும் மேலேகண்டமுறையாக சக்திக்கு ஆவிர்பாவம் உண்டாகிறது. முதல் மூன்று ரூபங்களும் மாஹேஶ்வரியாகிய துர்க்கையின் அம்சம். அந்த அம்சங்களுக்கு முதல் மூன்று நாட்களிலும் பிரதான ஆவிர்பாவம். நான்காவது ஐந்தாவது, ஆருவது ரூபங்கள் மஹாலக்ஷ்மியின் அம்சங்கள். அந்த அம்சங்களுக்கு நான்காவது, ஐந்தாவது, ஆருவது நாட்களில் பிரதான ஆவிர்பாவம். ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது ரூபங்கள் ப்ராஹ்மீயாகிய ஸரஸ்வதியின் அம்சங்கள். அந்த அம்சங்களுக்கு ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது நாட்களில் பிரதான ஆவிர்பாவம். இவ்விதமாக ஒவ்வொருநாளும் ஒரு அம்சம் பிரதானமாகவும் மற்ற அம்சங்கள் பரிவாரங்களான அங்க தேவதைகளாகவும் அமைகின்றன. இந்த முறையை உட்கொண்டுதான்

ஷஷ்டீஸப்தக்ஷயே ப்ரத்யாஷ்டௌ ஹைரவபூஜிதாம்

என்று பரதேவதையை ஸ்துதிக்கப்படுகிறது. பிரதான சக்தியும் பரிவார சக்திகளும் நவராத்திரியில் ஒவ்வொருநாளும் அமையும் முறையாவது.

முதலாவது நாள்

| | | |
|---|---|---|
| 2 | 3 | 4 |
| 9 | 1<br>மாஹேஶ்வரீ | 5 |
| 8 | 7 | 6 |

இரண்டாவது நாள்

| | | |
|---|---|---|
| 1 | 3 | 4 |
| 9 | 2<br>கௌமாரீ | 5 |
| 8 | 7 | 6 |

இவ்விதமாக மூன்ருவது நாளில் மூன்ருவது ரூபமாகிய வாராஹிமத்தியிலும் 1, 2, 4, 5, 6, 7, 8, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும் நான்காவதுநாளில் மஹாலக்ஷ்மி பிரதானமாகவும் 1, 2, 3, 5, 6, 7, 8, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும்

ஐந்தாவது நாளில் வைஷ்ணவீ பிரதானமாகவும் 1, 2, 3, 4, 6, 7, 8, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும்

ஆருவது நாளில் இந்திராணி பிரதானமாகவும் 1, 2, 3, 4, 5, 7, 8, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும்

ஏழாவது நாளில் ப்ராஹ்மீயாகிய சரஸ்வதி பிரதானமாகவும் 1, 2, 3, 4, 5, 6, 8, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும்

எட்டாவது நாளில் நாரஸிம்ஹி பிரதானமாகவும், 1, 2, 3, 4, 5, 6, 7, 9-வது ரூபங்கள் பரிவாரமாகவும்,

ஒன்பதாவது நாளில்வாராஹீ பிரதான்மாகவும், 1, 2, 3, 4, 5, 6, 7, 8-வது ரூபங்கள் பரிவாரமாகவும் அமைகின்றன.

(9) நவராத்திரியின் முடிவில் மூன்றுநாட்களிலும் ஸரஸ்வதியின் ரூபங்களுக்கு ஆவிர்பாவம் இருப்பதால், நவராத்திரியின் கடைசியில் ஸரஸ்வதிபூஜையென்று உபாஸனையானது அனுஷ்டிக்கப்படுகின்றது. பெயர் மட்டும் அப்படி இருந்தாலும் எல்லா ரூபங்களும் ஆவிர்பாவமாகி அந்த ரூபங்களில் ஸரஸ்வதியின் அம்சமாகிய சாமுண்டி ரூபம் பிரதானமாகவும் மற்ற ரூபங்கள் அங்கமாகவும் இருப்பதால் பூஜாமந்திரத்தில் ஸமிஷ்டியாக ஐம்ஹ்ரீம்க்லீம்ஸௌஸ்ஹ்ரீம் வஜ்ரவாஹி என்று வழக்கமாய் ஜபிக்கப்படுவதைக் காண்க.

இவ்விதமாக மகாலயபட்சமும் நவராத்திரியும் அனுஷ்டிப்பதற்கு சூட்சுமமான காரணமிருப்பதால் அந்த அனுஷ்டானங்கள் தொன்றுதொட்டு நமது நாட்டில் ஆசரிக்கப்பட்டுவருகின்றன.

ஓம் தத் ஸத்.

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்.

---

## நன்மொழி.

(67) உண்மை நினை, உண்மை பேசு, உண்மையாக ஒழுகு. இதனால், உண்மை அறிய திறமை உண்டாம்.

(68) பாபத்தொழில் துக்கத்திற்கு வித்தாம்.

(69) ஒவ்வொருவன உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றான். உற்றுப்பார்த்தால் அவருடைய ஏகதேச அம்சத்தை அறியலாம்.

# புத்தகவரவு.

---

**பாரத வினவிடை**:-(முதலாம்பாகம், இரண்டாம்பாகம்):-இவ்விரண்டு புஸ்தகங்களும், இராமாயண வினவிடையைப் போலவே எளிய தமிழ் நடையில் அழகாய் எழுதப்பட்டுள்ளன. யாவருக்கும் பயன்படக்கூடியவை. லௌகிக, வைதிக, ஞானக்களஞ்சியமாகிய மஹாபாரதத்தை முறைப்படி படித்துத் தெரிந்து தெளிவு பெறுமுன் இத்தகைய வினவிடைப் புத்தகங்கள் மிகவும் பயனுள்ளவை. பிரஹ்ம ஸ்ரீ கஸ்தூரிரங்கய்யங்கார் அவர்கள், நம் தமிழ் நாட்டாருக்கு இப்புத்தகங்களால் பேருதவி புரிந்து வருகின்றார்.

தென்னாட்டில் உள்ள ஒவ்வொரு கிருகத்திலும் அவசியம்இருக்கவேண்டிய புத்தகங்களில் இவைகளும் முக்கியமானவை.

மைலாப்பூரில் இருக்கின்ற ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியார்களிடம் இப்புத்தகங்களை விலைக்குப் பெறலாம்.

**கிரிஸெல்டா**:—அல்லது பொறுமையுள்ள மனைவி. இது ஒரு நாவல்; கட்டுக்கதை. உலக இயல்புக்கு பொருத்தமில்லா ஸம்பவங்கள் உளதாயினும் மிகவும் உருக்கமான கதை. இது மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருடைய பிரசுரம். இதன் விலை அணா 3 தான்.

**குமாரஸம்பவம்**:—மகாகவி ஸ்ரீ காளிதாஸரால் வடமொழியில், செய்துள்ளதை தென்மொழியில் எளிய பாட்டுகளாக, யாவரும், முக்கியமாக பெண்கள் வாசிக்கும்படியாக, கல்லடைக்குரிச்சி வித்தியாசாலை பிரதம உபாத்தியாயர் பிரஹ்ம ஸ்ரீ K. P. இராமஸ்வாமி அய்யர்வர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இம்மொழிபெயர்ப்பு நன்றாய் அமைந்துள்ளது. பாக்களும் அழகாயும் இனிமையாயும் யாவருக்கும் சுலபநடையாயும் இருக்கின்றன. இத்துடன் சிவஸ்தோத்திரமஞ்சரி, தேவீஸ்தோத்திரமஞ்சரி, தேவீமானஸிகபூஜை, குகாஷ்டகம் முதலியவை சேர்த்துள்ளன. சென்னை விஜயந்தி அச்சியந்திரசாலையில் நன்றாய் அச்சு இயற்றப்பட்டிருக்கின்றது. இதன் விலை அணா 8 தான்.

**கணக்கறி விளக்கம்**:—இச்சிறு புத்தகம் 'செந்தமிழ்ச்செல்வியின்' பத்திராதிபரான வித்துவான் K. அருணாசலத் தேவரால் இயற்றப்பட்டது. இதில், கிரிசை, பாரம், வெற்றிலைக் கணக்கு, பெருங்குழி மாறல் முதலிய கணக்கு முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக கிராமவாசிகளுக்கு இப்புத்தகம் பயன்படும்.

**பிரபாவதி**:—இது ஒரு நாவல். கட்டுக்கதை. முதலில் வங்கபாஷையில் **நகேந்திரநாத் சட்டர்ஜி** என்பாரால் செய்துள்ளது. பின்பு, மைசூரில்

மூன்சீபாக இருந்து பென்ஷன்பெற்றிருக்கிற ஸ்ரீமான். வெங்கடாசாரியார் அவர்கள், அதை கன்னடபாஷையில் மொழிபெயர்த்துள்ளார். பின்பு அந்த க்கன்னடபாஷையிலுள்ள புத்தகம் தமிழில் ஸ்ரீசைல, தாதாசாரியார் மொழிபெயர்த்தார். முதல் கதை வியசனமாக முடிவுபெற்றது - பின்பு இவர் ஒரு அத்தியாயம் சேர்த்து, சந்தோஷகரமாய் முடியும்படி செய்திருக்கிறார். கதை நன்றாய் நடைபெறுகிறது. பின்சேர்த்த அத்தியாயத்தின் விஷயம் நம்தேசத்தினருக்கு சற்று அசம்பாவிதமாக இருப்பினும், அவ்விதம் சேர்த்து முடித்தலே நம்மனசுக்கு ஆறுதலை உண்டுபண்ணுகிறது. இன்றேல், சகிக்கக்கூடாத துக்கத்துடன் கதையை முடித்தல் நலமன்று. ஜன்மம் துக்கம் என்றார் பகவான் பவுத்தர். கட்டுக்கதையால் இன்னும் அதிக துக்கத்தை உண்டுபண்ணவேண்டுமன்றே இது எல்லோரும் வாசித்து ஆநந்திக்கத்தக்கது. இதன் விலை அணா 4. தான். இது மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் நன்றாய் அச்சியற்றப்பெற்று பிரசுரமாகியிருக்கிறது.

**வேதாந்தசூளாமணி:**—இது ஒருவேதாந்தநூல். வேதாந்தபரிச்சேதம் என்றநூல் கன்னடபாஷையில் உள்ளது. அதை துறைமங்கலம் சிவப்பிரகாசஸ்வாமிகள் தமிழில் விருத்தப்பாவடிவமாக மொழிபெயர்த்துள்ளார். அதற்குப்பின்பிறகை அருணாசலஸ்வாமிகள் ஒருவிரிவுரை எழுதிவைத்திருந்தார்கள். இவைகளை ஸ்ரீமான் கோ. வடிவேலுசெட்டியார் அவர்களைக்கொண்டு நன்றாய்ப் பரிசோதிப்பித்து, திருமந்திரம் விசுவநாதபிள்ளை என்பார் ரிப்பன் அச்சியந்திரசாலையிற் பிரவித்தம் செய்திருக்கின்றார். இது வேதாந்திகளுக்கு உபயோகமாயுள்ள ஒரு உயர்ந்த வேதாந்தநூல். நல்லகாகிதத்தில் தெளிவாகவும் செவ்வையாகவும் அச்சியற்றி வெளிவந்திருக்கிறது. இதன் விலை ரூ 1—4—0. வேண்டுவோர் சென்னையில் ரிப்பன் பிரவில் பெற்றுக்கொள்ளலாம்.

**சந்திரசேகரன்:**—இது, பங்காளத்தில் வித்வத் சிரேஷ்டரான பங்கிம் சந்திரசட்டோபாத்யாயர் வங்க பாஷையில் இயற்றிய அருமையான நாவல். இதை மஹேசகுமாரசர்மா என்பார் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்நாவலின் கற்பனையும், உலகஇயல்பின் விஸ்தாரமான விவரணமும், வெகுஅழகாய் நடைபெறுகின்றன. ஸமயோஜிதமான ஞானஉபதேசங்களும் ஆங்காங்கு செய்யப்பெற்றுள்ளன. இந்நாவலையாவரும் வாசிக்கத்தக்கது. இஃது எளிய தமிழ்நடையில் மொழிபெயர்ப்பெனத் தெரியாதபடி அவ்வளவு அழகாய் அமைந்துள்ளது. மைலாப்பூரில் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரால் செவ்வையாக அச்சியற்றி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. தான்.

# சமாசாரக்கொத்து.

---

பிரஹ்மஞ்ஞானசபை:—இம்மஹாசபை ஆதியில், அமெரிக்காவின் ஐக்கியமாஹாணத்தின் பிரதான நகரான • நியூயார்க் என்னும் பட்டணத்தில் 1875ஹு நவமபர்மீ 17உ ஸ்தாபிக்கப்பெற்றது. 1879-ம்ஹூத்தில் பம்பாய் நகர்வந்து சேர்ந்தது. 1882-ம் ஹூத்தில் சென்னை ஆதியாற்றின் தென்கரையில் ருஷி ஆசிரமம் என்று சொல்லத்தக்க தோட்டத்தில் நிலையான வாசஸ்தானம் பெற்றது. இப்போது இதன் கிளைச்சபைகள், 1, 223. அவைகளுக்குள் சுறுசுறுப்பாயுள்ளவைகள், 806. அவைகளின் அங்கத்தினர்கள் 20,356 பெயர்கள். நம் இந்தியாவின் உள்ள கிளைச்சபைகள் 400. அவைகளின் அங்கத்தினர்கள் 5,252. மற்ற 823 கிளைச்சபைகளும், 15,000 அங்கத்தினர்களும், ஐரோப்பா, தென், வட அமெரிக்காக்கள், ஆஸ்டிரேலியா முதலிய பல கண்டங்களிலும், நாடுகளிலும், நகர்களிலும் பரவி இருக்கின்றார்கள். ஆலவிருக்ஷம்போல் விழுதுவிட்டுப் பரவிவருகின்றன. சபையின், சென்ற வருஷத்தின் முடிவான மகோத்ஸவம் ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தின் கொடைபோன்ற நிழலின்கண் சென்ற ஜனவரிமீ 1உ, சாயங்காலம், மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாரின் அக்கிராஸனத்தின் கீழ் விமரிசையாகவும், நேர்மையாகவும், மனவுத்ஸாகமுண்டாகும்படியாகவும், கொண்டாடப்பெற்றது. அவ்விருக்ஷத்தின்கீழ், 3,000 ஜனங்கள் கூடினார்கள். சைவர், வைஷ்ணவர் முதலான பல வகுப்பினரான ஹிந்துக்கள், பார்ஸிகள், கிறிஸ்துவர்கள், பலதேசத்திய பல ஜாதியர்கள், மிகவும் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாய் ஒரே மனத்தினராய் தோன்றினார்கள். மாலை சூரியன் மலைவாய்ப்போய் அமையும் தருணமாக இருந்தது. அவ்வாயிரக்கணக்கானவர்களின் முகங்களில், மரத்தின் இலைகளின் இடுவல்கள் வழியாக நுழைந்து இந்துபோன்ற குளிர்ந்த சூரிய கிரணங்கள் பட்டு பிரதிபிம்பித்தன. மந்தமாக சுகமான சமுத்திரக்காற்று வீசியது. பல நாட்டு அறிஞர்கள், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஹிந்திபாஷைகளில் பிரஹ்மஞ்ஞான சபையின் உயர்வைப் பற்றியும், அதன் உயர்வற உயர்நலம் அமைந்த நோக்கங்களைப் பற்றியும், மஹாத்துமாக்கள் அச்சபையைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்துக்கொண்டு வருவதைப் பற்றியும், இனி ஒரு மஹா புருஷன் சமீபகாலத்தில் லோக குருவாக அவதாரமாவார் என்பதைப் பற்றியும், விஸ்தாரமான உபந்நியாஸங்கள் நிகழ்ந்தன. கடைசியாக சபாநாயகியான அம்மையார், மேற்கண்ட விஷயங்களைப்பற்றிக் கேட்போர் மயிர்க்கூச்சிபெறும்படியாகவும், வெகு அழகாயும், கேட்போர் கண்களில் ஆநந்த பாஷ்பம் சொரியும்படியாகவும், இச்சபையின் மகிமையையும், இதைச் சேருகிறவர்களின் உரிமையையும் கடமைகளையும் பற்றிச் செவ்வனவே, பிரசங்கித்து மஹாத்மாக்களின் அருள் வெள்ளம் பெருகி, எங்கும் பரவி ஜனஸமூக

த்திற்கு எல்லா நலமும் உண்டாக்கவேண்டுமென மிக பக்திசிரத்தையுடன் பிரார்த்தித்து முடித்தனர். சூரியனும் அஸ்தமித்தான், கூடிய ஜனங்களும் கலைந்து அவரவரிடம் நாடினூர்கள். எல்லாம் சுபமாக நடந்தது.

**பூமியின் வயது:**—பூமியானது ஒருகாலத்தில் தகதகஎன்று கொதித்துக்கொந்தளிக்கும் சூக்ஷ்மமான ஆவி மயமாக இருந்து, பின்பு நாளடைவில், ஆவிஸ்துவித்து, அப்பு இயல்புள்ளதாக மாறினது. பின்பு இன்னும் கெட்டியானதாக ஜலமும், நிலமுமாகப் பிரிந்து ஸ்தூலித்தது. அதன் மேற்பரப்பின் பள்ளங்களில் நீர் தங்க ஆரம்பித்தது. மலைகளும், மேகங்களும், மழையும், நீர் ஓடைகளும், அருவிகளும், நதிகளும் உண்டாயின. இந்நீர்த் திரள்கள் கெட்டியான பூமியை தேய்த்துத் தேய்த்து பலவர்ண உப்பு திரவியங்களை நீர்ப்பரப்பு நிலையில் கொண்டுபோய் வந்தன, அந்நீர்ப்பரப்பு நிலையே சமுத்திரங்களாயின. சமுத்திரத்தின்கண்ணுள்ள உப்பு, நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. இவ்வுப்பு திரவியம் வர வர ஏறிக்கொண்டு வரும் அளவையால், பூமி கெட்டியானதின்மேல் 6கோடியே 50லட்சம் வருஷங்களாயின என்று பூமி சாஸ்திரிகள் கணித்திருக்கின்றூர்கள். "**மனிதன் வமிசாவளிகளின் உண்மை**" என்ற புத்தகத்தில், இக்காலம் 40கோடி வருஷங்களுக்கு மேலாயின என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்கா தேசத்தினராகிய **ஆண்ட்ருகார்நேகி** என்பார் ஒரு பெரிய குபேரர், செல்வத்தின் உத்தரவாதத்தை நன்குஉணர்ந்தவர். நன்றாய்க்கொண்டு செலுத்துகின்றூர். மேனுடுகளில் அநேக முக்கியமான பட்டணங்களில் பொதுஜன உபயோகமாக, பல புத்தகசாலைகள் ஏற்படுத்தியுள்ளார். உலகத்தில் ராஜாங்கத்தாருள்ளும் ஜாதியாருள்ளும் போர்கள் உண்டாகாமல் தடுப்பதற்குரிய உபாயங்களைத் தேடுவதற்கு 3கோடி ரூபாய் எடுத்துவைத்திருக்கிறூர். அதை வகிக்கவும், அதன் வரும்படியினின்று, தம் கருத்தாகிய போர்த்தொழிலைத் தொலைக்கவும், உலகத்தில் ஜன சமூகத்தில் நேர்மையும், சமாதானம் என்றும் நடைபெறவும் ஹேதுவான காரியங்களைச் செய்யவும், சில டிரஸ்டிகளை அதாவது தர்மகர்த்தர்களை நியமனம் செய்துள்ளார். இவர் அன்றோ அறிஞர், இவர் அன்றோ செல்வத்தின் பெருமையை அறிந்தவர். இத்தகையரை நோக்கியே, திருவள்ளுவர் அடியில் வருமாறு சொல்லலாயினர்.

ஊருணி நீர் நிறைந்ததற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.

**நம்நாட்டில் கிருஷியின் முறைகள்:**—இவை மென்மேலும் அபிவிருத்தியடையவேண்டுமெனக் கருதி, கவர்ன்மெண்டார் பல இடங்களில், விவசா

யப்பண்ணைகளை, சர்க்கார்ச் செலவில் ஸ்தாபித்து, உரங்கள், ஆழஉழவு, கருக ப்புசாகுபடி, பலதினுசு தானியங்களைப்பயிரிடுதல் இவைபோன்றவிஷயமா யும் பல பரீக்ஷைகள் செய்து வருகின்றார்கள். முக்கியமாக சாமல்கோடு **பாலூர், ஹகாரி, கோவில்பட்டி, கோயம்புத்தூர், பெல்லாரி, தாலிபப ம்பா, நண்டியால்,** முதலிய இடங்களில் சர்க்கார் பண்ணைகள் இவ்வித மாக நடத்தப்பட்டு வருகின்றன. நம்மவர்கள், இந்த இடங்களுக்குப்போய் அக்கிருஷித் தொழில் முறைகளின்உயர்நலத்தைத் தெரிந்துகொண்டு, தம் தம் கிராமங்களில், சௌகரியத்துக்குத் தக்கபடி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

**பௌத்தமத வினவிடை:**—கர்னல் ஆல்காட்டு என்பவரால், ஆங்கில த்தில் உள்ளது. ஆங்கிலபுத்தகம் 43-ம் பதிப்பு தமிழில் மொழிபெயர்க்க ப்பட்டிருக்கிறது. ஒரு அணு போஸ்டேஜுடன் லேபில், சென்னை ஆதியார் தியாஸபிஸ்டு மானேஜர் B. P. வாடியா அவர்களுக்கு (Mr. Wadia, Manager, "Theosophy Office, Adyar, Madras") அனுப்பினால், அப்புத்தகம் இனமாக அனுப்பப்படும். இவ்விதம் ஏற்பாடு வருகிற ஏப்பிரல்மீ 30உ வரையில் நடைபெறும்.

**தஞ்சாவூர்ஜில்லா பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின், 8வது கூட் டம்:**—நாளிது பிப்பிரவரிமீ 18-19-உகளில், கும்பகோணத்தில் இந்த பிர ஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் கூட்டம் கூடும். அச்சமயத்தில் மாதுஸ்ரீ **அன்னிபெஸண்டு** அம்மையார் அக்கிராஸநம் வகிப்பார்கள். அக்காலத்தில் **கும்பகோணத்தின்** கண்ணுள்ள கிளைச்சபைக்கு நூதனமாக ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் கிரகப்பிரவேசமாக உத்ஸவமும் நடத்தப்பெறும். அச்சம யத்தில் மகா-ர-ர-ஸ்ரீ கனந்தங்கிய திவான் பகதூர் இரகுநாதராயர் அவர்க ளும், கனந்தங்கிய ராவ்பகதூர் எம். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களும், இன்னும் சிலகனவான்களும் உபந்நியாசங்கள் செய்வார்கள்.

---

## நன்மொழி.

**70.** நலம்வாய்ந்தகாலம், இறந்தது என்று எண்ணற்க. அது வருங்காலம்தான் என்று எண்ணுக.

**71.** "இச்சரீரம் போய்விடும், இவ்வாழ்நாள் நிலையாது. இச் சம்பத்து நமக்கு நலம்தராது" என்று எப்போது நினைக்கின்றானோ அப்போதுதான், ஒருவன் உண்மையில், உயிர்வாழ்வான். அன் றேல், இருந்தும் இறந்தவனாவான்.